ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

# முதல் திருவந்தாதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# முதல் திருவந்தாதி

## தனியன்

**கைதைசேர் பூம் பொழில் சூழ் கச்சிநகர் வந்துதித்த ⋆**
**பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு ⋆**
**வையத்து அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி ⋆**
**படிவிளங்கச் செய்தான் பரிந்து**

‡ வையம் தகளியா ⋆
வார் கடலே நெய் ஆக ⋆
வெய்ய கதிரோன் விளக்காக ⋆
செய்ய சுடர் ஆழியான் அடிக்கே ⋆
சூட்டினேன் சொல் மாலை ⋆
இடர் ஆழி நீங்குகவே என்று ‖ **1** ‖

என்று கடல் கடைந்தது ⋆
எவ்வுலகம் நீர் ஏற்றது ⋆
ஒன்றும் அதனை உணரேன் நான் ⋆
அன்றது அடைத்துடைத்துக் ⋆
கண்படுத்த ஆழி ⋆
இது நீ படைத்திடந்துண்டுமிழ்ந்த பார் ‖ **2** ‖

பார் அளவும் ஓர் அடிவைத்து ⋆
ஓர் அடியும் பார் உடுத்த ⋆
நீர் அளவும் செல்ல நிமிர்ந்ததே ⋆

சூர் உருவின் பேய் அளவு கண்ட ⋆
பெருமான் ! அறிகிலேன் ⋆
நீ அளவு கண்ட நெறி ॥ **3** ॥

நெறி வாசல் தானேயாய் ⋆
நின்றானை ⋆
ஐந்து பொறி வாசல் போர்க் கதவம் சார்த்தி ⋆
அறிவானாம் ஆல மர நீழல் ⋆
அறம் நால்வர்க்கன்றுரைத்த ⋆
ஆலம் அமர் கண்டத்தரன் ॥ **4** ॥

அரன் நாரணன் நாமம் ⋆
ஆன்விடை புள் ஊர்தி ⋆
உரை நூல் மறை உறையும் கோயில் ⋆
வரை நீர் கருமம் அழிப்பளிப்புக் ⋆
கையது வேல் நேமி ⋆
உருவம் எரி கார் மேனி ஒன்று ॥ **5** ॥

ஒன்றும் மறந்தறியேன் ⋆
ஓத நீர் வண்ணனை நான் ⋆
இன்று மறப்பனோ ஏழைகாள் ⋆
அன்று கருவரங்கத்துள் கிடந்து ⋆
கை தொழுதேன் கண்டேன் ⋆
திருவரங்க மேயான் திசை ॥ **6** ॥

திசையும் ⋆
திசை உறு தெய்வமும் ⋆
தெய்வத் திசையும் கருமங்கள் எல்லாம் ⋆
அசைவில் சீர்க் கண்ணன் நெடு மால் ⋆

கடல் கடைந்த ⋆
கார் ஓத வண்ணன் படைத்த மயக்கு ‖ **7** ‖

மயங்க வலம்புரி ⋆
வாய் வைத்து ⋆
வானத்தியங்கும் எறி கதிரோன் தன்னை ⋆
முயங்கமருள் தேர் ஆழியால் மறைத்தது ⋆
என் நீ திருமாலே ⋆
போர் ஆழிக் கையால் பொருது ‖ **8** ‖

பொருகோட்டோர் ஏனமாய்ப் ⋆
புக்கிடந்தாய்க்கு ⋆
அன்றுன் ஒரு கோட்டின் மேல் கிடந்ததன்றே ⋆
விரி தோட்ட சேவடியை நீட்டித் ⋆
திசை நடுங்க விண் துளங்க ⋆
மா வடிவில் நீ அளந்த மண் ‖ **9** ‖

மண்ணும் மலையும் ⋆
மறி கடலும் மாருதமும் ⋆
விண்ணும் விழுங்கியது மெய் என்பர் ⋆
எண்ணில் அலகளவு கண்ட ⋆
சீர் ஆழியாய்க்கு ⋆
அன்றிவ் வுலகளவும் உண்டோ உன் வாய் ‖ **10** ‖

வாய் அவனை அல்லது ⋆
வாழ்த்தாது ⋆
கை உலகம் தாயவனை அல்லது ⋆
தாம் தொழா ⋆
பேய் முலைநஞ்சு ஊண் ஆக உண்டான் ⋆

உருவொடு பேர் அல்லால் ⋆
காணா கண் கேளா செவி ‖ **11** ‖

செவி வாய் கண் மூக்கு ⋆
உடல் என்றைம் புலனும் ⋆
செந்தீ புவி கால் ⋆
நீர் விண் பூதம் ஐந்தும் ⋆
அவியாத ஞானமும் வேள்வியும் ⋆
நல்லறமும் என்பரே ⋆
ஏனமாய் நின்றாற்கியல்வு ‖ **12** ‖

இயல்வாக ⋆
ஈன் துழாயான் அடிக்கே செல்ல ⋆
முயல்வார் இயல் அமரர் முன்னம் ⋆
இயல்வாக நீதியால் ஓதி ⋆
நியமங்களால் பரவ ⋆
ஆதியாய் நின்றார் அவர் ‖ **13** ‖

அவர் அவர் தாம் தாம் ⋆
அறிந்தவாறேத்தி ⋆
இவர் இவர் எம் பெருமான் என்று ⋆
சுவர்மிசைச் சார்த்தியும் ⋆
வைத்தும் தொழுவர் ⋆
உலகளந்த மூர்த்தி உருவே முதல் ‖ **14** ‖

முதல் ஆவார் மூவரே ⋆
அம் மூவர் உள்ளும் முதல் ஆவான் ⋆
மூரி நீர் வண்ணன் ⋆
முதல் ஆய நல்லான் அருள் அல்லால் ⋆

நாம நீர் வையகத்து ⋆
பல்லார் அருளும் பழுது ‖ **15** ‖

பழுதே பல பகலும் ⋆
போயின என்று ⋆
அஞ்சி அழுதேன் ⋆
அரவணை மேல் கண்டு தொழுதேன் ⋆
கடல் ஓதம் கால் அலைப்பக் ⋆
கண்வளரும் ⋆
செங்கண் அடல் ஓத வண்ணர் அடி ‖ **16** ‖

அடியும் படி கடப்பத் ⋆
தோள் திசை மேல் செல்ல ⋆
முடியும் விசும்பளந்ததென்பர் ⋆
வடி உகிரால் ஈர்ந்தான் ⋆
இரணியனதாகம் ⋆
இருஞ்சிறைப் புள் ஊர்ந்தான் உலகளந்த நான்று ‖ **17** ‖

நான்ற முலைத்தலை ⋆
நஞ்சுண்டு ⋆
உறி வெண்ணெய் தோன்ற உண்டான் ⋆
வென்றி சூழ் களிற்றை ஊன்றிப் ⋆
பொருதுடைவு கண்டானும் ⋆
புள்ளின்வாய் கீண்டானும் ⋆
மருதிடை போய் மண் அளந்த மால் ‖ **18** ‖

மாலும் கருங்கடலே ! ⋆
என் நோற்றாய் ⋆
வையகம் உண்டு ⋆

ஆலின் இலைத் துயின்ற ஆழியான் ⋆
கோலக் கரு மேனிச் ⋆
செங்கண் மால் கண்படையுள் ⋆
என்றும் திருமேனி நீ தீண்டப் பெற்று ! ॥ **19** ॥

பெற்றார் தளை கழலப் ⋆
பேர்ந்தோர் குறள் உருவாய் ⋆
செற்றார் படி கடந்த செங்கண் மால் ⋆
நற்றாமரை மலர்ச் சேவடியை ⋆
வானவர் கை கூப்பி ⋆
நிரை மலர் கொண்டு ஏத்துவரால் நின்று ॥ **20** ॥

நின்று நிலமங்கை ⋆
நீர் ஏற்று மூவடியால் ⋆
சென்று திசை அளந்த செங்கண் மாற்கு ⋆
என்றும் படை ஆழி புள் ஊர்தி ⋆
பாம்பணையான் பாதம் ⋆
அடை ஆழி நெஞ்சே ! அறி ॥ **21** ॥

அறியும் உலகெல்லாம் ⋆
யானேயும் அல்லேன் ⋆
பொறி கொள் சிறை உவணம் ஊர்ந்தாய் ⋆
வெறி கமழும் காம்பேய் மென்தோளி ⋆
கடை வெண்ணெய் உண்டாயை ⋆
தாம்பே கொண்டார்த்த தழும்பு ॥ **22** ॥

தழும்பிருந்த சார்ங்க நாண் ⋆
தோய்ந்தவாமங்கை ⋆
தழும்பிருந்த தாள் சகடம் சாடி ⋆

தழும்பிருந்த பூங்கோதையாள் வெருவப் ⋆
பொன் பெயரோன் மார்பிடந்த ⋆
வீங்கோத வண்ணர் விரல் ‖ **23** ‖

விரலோடு வாய் தோய்ந்த ⋆
வெண்ணெய் கண்டு ⋆
ஆய்ச்சி உரலோடுறப் பிணித்த நான்று ⋆
குரல் ஓவாதேங்கி நினைந்து ⋆
அயலார் காண இருந்திலையே ⋆
ஓங்கோத வண்ணா ! உரை ‖ **24** ‖

உரை மேல் கொண்டு ⋆
என் உள்ளம் ஓவாது ⋆
எப்போதும் வரை மேல் ⋆
மரகதமே போல ⋆
திரை மேல் கிடந்தானைக் ⋆
கீண்டானை ⋆
கேழலாய்ப் பூமி இடந்தானை ஏத்தி எழும் ‖ **25** ‖

எழுவார் விடை கொள்வார் ⋆
ஈன் துழாயானை ⋆
வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார் ⋆
வினைச் சுடரை நந்துவிக்கும் ⋆
வேங்கடமே ⋆
வானோர் மனச் சுடரைத் தூண்டும் மலை ‖ **26** ‖

மலையால் குடை கவித்து ⋆
மாவாய் பிளந்து ⋆
சிலையால் மராமரம் ஏழ் செற்று ⋆

கொலை யானைப் போர்க் கோடொசித்தனவும் ⋆
பூங்குருந்தம் சாய்த்தனவும் ⋆
கார்க் கோடு பற்றியான் கை ‖ **27** ‖

கைய வலம்புரியும் நேமியும் ⋆
கார் வண்ணத்தைய ! ⋆
மலர் மகள் நின் ஆகத்தாள் ⋆
செய்ய மறையான் நின் உந்தியான் ⋆
மா மதிள் மூன்றெய்த ⋆
இறையான் நின் ஆகத்திறை ‖ **28** ‖

இறையும் நிலனும் ⋆
இரு விசும்பும் காற்றும் ⋆
அறை புனலும் செந்தீயும் ஆவான் ⋆
பிறை மருப்பின் பைங்கண் மால் யானை ⋆
படு துயரம் காத்தளித்த ⋆
செங்கண் மால் கண்டாய் தெளி ‖ **29** ‖

தெளிதாக ⋆
உள்ளத்தைச் செந்நிறீ இ ⋆
ஞானத்தெளிதாக ⋆
நன்குணர்வார் சிந்தை ⋆
எளிதாகத் தாய் நாடு கன்றே போல் ⋆
தண் துழாயான் அடிக்கே ⋆
போய் நாடிக் கொள்ளும் புரிந்து ‖ **30** ‖

புரி ஒரு கை பற்றி ⋆
ஓர் பொன் ஆழி ஏந்தி ⋆
அரி உருவும் ஆள் உருவும் ஆகி ⋆

எரி உருவ வண்ணத்தான் மார்பிடந்த ⋆
மால் அடியை அல்லால் ⋆
மற்று எண்ணத்தான் ஆமோ இமை ॥ **31** ॥

இமையாத கண்ணால் ⋆
இருள் அகல நோக்கி ⋆
அமையாப் பொறி புலன்கள் ஐந்தும் நமையாமல் ⋆
ஆகத்தணைப்பார் ⋆
அணைவரே ⋆
ஆயிர வாய் நாகத்தணையான் நகர் ॥ **32** ॥

நகரம் அருள் புரிந்து ⋆
நான்முகற்கு பூமேல் ⋆
பகர மறை பயந்த பண்பன் ⋆
பெயரினையே புந்தியால் சிந்தியாது ⋆
ஓதி உருவெண்ணும் ⋆
அந்தியால் ஆம் பயன் அங்கென் ॥ **33** ॥

என் ஒருவர் மெய் என்பர் ⋆
ஏழ் உலகுண்டு ⋆
ஆல் இலையில் முன் ஒருவன் ஆய முகில் வண்ணா ⋆
நின் உருகிப் பேய்த் தாய் முலை தந்தாள் ⋆
பேர்ந்திலளால் ⋆
பேர் அமர்க் கண் ஆய்த் தாய் முலை தந்த ஆறு ॥ **34** ॥

ஆறிய அன்பில் ⋆
அடியார் தம் ஆர்வத்தால் ⋆
கூறிய குற்றமாக் கொள்ளல் நீ தேறி ⋆
நெடியோய் ! அடி ⋆

அடைதற்கன்றே ⋆
ஈர் ஐந்து முடியான் படைத்த முரண் ‖ **35** ‖

முரணை வலி ⋆
தொலைதற்காம் அன்றே ⋆
முன்னம் தரணி தனதாகத்தானே ⋆
இரணியனைப் புண் நிரந்த வள் உகிரால் ⋆
பொன் ஆழிக் கையால் ⋆
நீ மண் இரந்து கொண்ட வகை ‖ **36** ‖

வகை அறு நுண் கேள்வி ⋆
வாய்வார்கள் ⋆
நாளும் புகை விளக்கும் பூம் புனலும் ஏந்தி ⋆
திசை திசையின் வேதியர்கள் ⋆
சென்றிறைஞ்சும் வேங்கடமே ⋆
வெண் சங்கம் ஊதிய வாய் மால் உகந்த ஊர் ‖ **37** ‖

ஊரும் வரி அரவம் ⋆
ஒண் குறவர் மால் யானை ⋆
பேர எறிந்த பெரு மணியை ⋆
கார் உடைய மின் என்று ⋆
புற்றடையும் வேங்கடமே ⋆
மேல் அசுரர் என்னென்ற மாலதிடம் ‖ **38** ‖

இடந்தது பூமி ⋆
எடுத்தது குன்றம் ⋆
கடந்தது கஞ்சனை முன் அஞ்ச ⋆
கிடந்ததுவும் நீர் ஓத மா கடலே ⋆

நின்றதுவும் வேங்கடமே ⋆
பேர் ஓத வண்ணர் பெரிது ‖ **39** ‖

பெரு வில் பகழிக் ⋆
குறவர் கைச் செந்தீ ⋆
வெருவிப் புனம் துறந்த வேழம் ⋆
இரு விசும்பில் மீன் வீழக் ⋆
கண்டஞ்சும் வேங்கடமே ⋆
மேல் அசுரர் கோன் வீழக் கண்டுகந்தான் குன்று ‖ **40** ‖

குன்றனைய குற்றம் செய்யினும் ⋆
குணம் கொள்ளும் ⋆
இன்று முதலாக என் நெஞ்சே ⋆
என்றும் புறன் உரையே ஆயினும் ⋆
பொன் ஆழிக் கையான் ⋆
திறன் உரையே சிந்தித்திரு ‖ **41** ‖

திருமகளும் மண்மகளும் ⋆
ஆய்மகளும் சேர்ந்தால் ⋆
திருமகட்கே தீர்ந்தவாறென்கொல் ⋆
திருமகள் மேல் பால் ஓதம் சிந்தப் ⋆
பட நாகணைக் கிடந்த ⋆
மால் ஓத வண்ணர் மனம் ‖ **42** ‖

மன மாசு தீரும் ⋆
அறு வினையும் சாரா ⋆
தனம் ஆய தானே கை கூடும் ⋆
புன மேய பூந் துழாயான் அடிக்கே ⋆

போதொடு நீர் ஏந்தி ⋆
தாம் தொழா நிற்பார் தமர் ॥ **43** ॥

தமர் உகந்ததெவ் வுருவம் ⋆
அவ் வுருவம் தானே ⋆
தமர் உகந்ததெப் பேர் மற்றப் பேர் ⋆
தமர் உகந்தெவ் வண்ணம் சிந்தித்து ⋆
இமையாதிருப்பரே ⋆
அவ் வண்ணம் ஆழியானாம் ॥ **44** ॥

ஆமே அமரர்க்கறிய ⋆
அது நிற்க ⋆
நாமே அறிகிற்போம் நல் நெஞ்சே ⋆
பூ மேய மா தவத்தோன் தாள் பணிந்த ⋆
வாள் அரக்கன் நீள் முடியை ⋆
பாதம் அத்தால் எண்ணினான் பண்பு ॥ **45** ॥

பண் புரிந்த நான்மறையோன் ⋆
சென்னிப் பலி ஏற்ற ⋆
வெண் புரி நூல் மார்பன் வினை தீர ⋆
புண் புரிந்த ஆகத்தான் ⋆
தாள் பணிவார் கண்டீர் ⋆
அமரர் தம் போகத்தால் பூமி ஆள்வார் ॥ **46** ॥

வாரி சுருக்கி ⋆
மதக் களிறைந்தினையும் ⋆
சேரி திரியாமல் செந்நிறீ இ ⋆
கூரிய மெய்ஞ்ஞானத்தால் ⋆

உணர்வார் காண்பரே ⋆
மேல் ஒருநாள் கைந் நாகம் காத்தான் கழல் ‖ **47** ‖

கழல் ஒன்றெடுத்து ⋆
ஒரு கை சுற்றி ஓர் கைமேல் ⋆
சுழலும் சுராசுரர்கள் அஞ்ச ⋆
அழலும் செருவாழி ஏந்தினான் ⋆
சேவடிக்கே செல்ல ⋆
மருவாழி நெஞ்சே ! மகிழ் ‖ **48** ‖

மகிழ் அலகொன்றே போல் ⋆
மாறும் பல் யாக்கை ⋆
நெகிழ முயல்கிற்பார்க்கல்லால் ⋆
முகில் விரிந்த சோதி போல் தோன்றும் ⋆
சுடர் பொன் நெடு முடி ⋆
எம் ஆதி காண்பார்க்கும் அரிது ‖ **49** ‖

அரிய புலன் ஐந்தடக்கி ⋆
ஆய் மலர் கொண்டு ⋆
ஆர்வம் புரியப் பரிசினால் புல்கில் ⋆
பெரியனாய் மாற்றாது வீற்றிருந்த ⋆
மாவலிபால் ⋆
வண் கை நீர் ஏற்றானைக் காண்பதெளிது ‖ **50** ‖

எளிதில் இரண்டடியும் ⋆
காண்பதற்கு ⋆
என் உள்ளம் தெளியத் தெளிந்தொழியும் செவ்வே ⋆
களியில் பொருந்தாதவனைப் ⋆

பொரல் உற்று ⋆
அரியாய் இருந்தான் திருநாமம் எண் ॥ **51** ॥

எண்மர் பதினொருவர் ⋆
ஈர் அறுவர் ஓர் இருவர் ⋆
வண்ண மலர் ஏந்தி வைகலும் ⋆
நண்ணி ஒரு மாலையால் ⋆
பரவி ஓவாது ⋆
எப்போதும் திருமாலைக் கை தொழுவர் சென்று ॥ **52** ॥

‡ சென்றால் குடையாம் ⋆
இருந்தால் சிங்காசனமாம் ⋆
நின்றால் மரவடியாம் நீள் கடலுள் ⋆
என்றும் புணையாம் மணி விளக்காம் ⋆
பூம் பட்டாம் புல்கும் அணையாம் ⋆
திருமாற்கரவு ॥ **53** ॥

அரவம் அடல் வேழம் ⋆
ஆன் குருந்தம் புள் வாய் ⋆
குரவை குடம் முலை மல் குன்றம் ⋆
கரவின்றி விட்டிறுத்து மேய்த்தொசித்துக் ⋆
கீண்டு கோத்தாடி ⋆
உண்டட்டெடுத்த செங்கண் அவன் ॥ **54** ॥

அவன் தமர் ⋆
எவ் வினையர் ஆகிலும் ⋆
எம் கோன் அவன் தமரே ⋆
என்றொழிவதல்லால் ⋆
நமன் தமரால் ஆராயப் பட்டு ⋆

அறியார் கண்டீர் ⋆
அரவணை மேல் பேர் ஆயற்காட் பட்டார் பேர் ॥ **55** ॥

பேரே வரப் பிதற்றல் அல்லால் ⋆
எம் பெம்மானை ⋆
ஆரே அறிவார் அது நிற்க ⋆
நேரே கடிக் கமலத்துள் இருந்தும் ⋆
காண்கிலான் ⋆
கண்ணன் அடிக் கமலம் தன்னை அயன் ॥ **56** ॥

அயல் நின்ற வல் வினையை ⋆
அஞ்சினேன் அஞ்சி ⋆
உய நின் திருவடியே சேர்வான் ⋆
நயநின்ற நன் மாலை கொண்டு ⋆
நமோ நாரணா என்னும் ⋆
சொல் மாலை கற்றேன் தொழுது ॥ **57** ॥

தொழுது மலர் கொண்டு ⋆
தூபம் கை ஏந்தி ⋆
எழுதும் எழு வாழி நெஞ்சே ⋆
பழுதின்றி மந்திரங்கள் கற்பனவும் ⋆
மால் அடியே கை தொழுவான் ⋆
அந்தரம் ஒன்றில்லை அடை ॥ **58** ॥

அடைந்த அரு வினையோடு ⋆
அல்லல் நோய் பாவம் ⋆
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் ⋆
நுடங்கிடையை முன் இலங்கை வைத்தான் ⋆

முரண் அழிய ⋆
முன் ஒரு நாள் தன் வில் அங்கை வைத்தான் சரண் ॥ **59** ॥

சரணா மறை பயந்த ⋆
தாமரையானோடு ⋆
மரண் ஆய மன் உயிர்கட்கெல்லாம் ⋆
அரணாய பேர் ஆழி கொண்ட ⋆
பிரான் அன்றி மற்றறியாது ⋆
ஓர் ஆழி சூழ்ந்த உலகு ॥ **60** ॥

உலகும் ⋆
உலகிறந்த ஊழியும் ⋆
ஒண் கேழ் விலகு கருங்கடலும் வெற்பும் ⋆
உலகினில் செந் தீயும் ⋆
மாருதமும் வானும் ⋆
திருமால் தன் புந்தியில் ஆய புணர்ப்பு ॥ **61** ॥

புணர் மருதின் ஊடு போய்ப் ⋆
பூங்குருந்தம் சாய்த்து ⋆
மணம் அருவ மால் விடை ஏழ் செற்று ⋆
கணம் வெருவ ஏழ் உலகும் தாயினவும் ⋆
எண் திசையும் போயினவும் ⋆
சூழ் அரவப் பொங்கணையான் தோள் ॥ **62** ॥

தோள் அவனை அல்லால் தொழா ⋆
என் செவி இரண்டும் ⋆
கேள் அவனதின் மொழியே கேட்டிருக்கும் ⋆
நா நாளும் கோள் நாகணையான் ⋆

குறை கழலே கூறுவதே ⋆
நாணாமை நள்ளேன் நயம் ‖ **63** ‖

நயவேன் பிறர் பொருளை ⋆
நள்ளேன் கீழாரோடு ⋆
உயவேன் உயர்ந்தவரோடல்லால் ⋆
வியவேன் திருமாலை அல்லது ⋆
தெய்வம் என்றேத்தேன் ⋆
வரும் ஆறென் என்மேல் வினை ‖ **64** ‖

வினையால் அடர்ப்படார் ⋆
வெந் நரகில் சேரார் ⋆
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் ⋆
நினைதற்கரியானைச் ⋆
சேயானை ⋆
ஆயிரம் பேர்ச் செங்கண் கரியானைக் கை தொழுதக் கால் ‖ **65** ‖

காலை எழுந்து ⋆
உலகம் கற்பனவும் ⋆
கற்றுணர்ந்த மேலைத் தலை மறையோர் வேட்பனவும் ⋆
வேலைக்கண் ஓர் ஆழியான் அடியே ⋆
ஓதுவதும் ஓர்ப்பனவும் ⋆
பேர் ஆழி கொண்டான் பெயர் ‖ **66** ‖

பெயரும் கருங்கடலே ⋆
நோக்குமாறு ⋆
ஒண் பூ உயரும் கதிரவனே நோக்கும் ⋆
உயிரும் தருமனையே நோக்கும் ⋆

ஒண் தாமரையாள் கேள்வன் ⋆
ஒருவனையே நோக்கும் உணர்வு ॥ **67** ॥

உணர்வார் ஆர் உன் பெருமை ⋆
ஊழிதோறூழி ⋆
உணர்வார் ஆர் உன் உருவம் தன்னை ⋆
உணர்வார் ஆர் விண்ணகத்தாய் ! மண்ணகத்தாய் ! ⋆
வேங்கடத்தாய் ! ⋆
நால்வேதப் பண்ணகத்தாய் ! நீ கிடந்த பால் ॥ **68** ॥

பாலன் தனதுருவாய் ⋆
ஏழ் உலகுண்டு ⋆
ஆல் இலையின் மேல் அன்று ⋆
நீ வளர்ந்த மெய் என்பர் ⋆
ஆல் அன்று வேலை நீர் உள்ளதோ ⋆
விண்ணதோ மண்ணதோ ⋆
சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு ॥ **69** ॥

சொல்லும் தனையும் ⋆
தொழுமின் விழும் உடம்பு ⋆
செல்லும் தனையும் திருமாலை ⋆
நல் இதழ்த் தாமத்தால் வேள்வியால் ⋆
தந்திரத்தால் மந்திரத்தால் ⋆
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று ॥ **70** ॥

நன்று பிணி மூப்புக் ⋆
கையகற்றி நான்கூழி ⋆
நின்று நில முழுதும் ஆண்டாலும் ⋆
என்றும் விடல் ஆழி நெஞ்சமே ! ⋆

வேண்டினேன் கண்டாய் ⋆
அடல் ஆழி கொண்டான் மாட்டன்பு ‖ **71** ‖

அன்பாழியானை ⋆
அணுகென்னும் நா அவன் தன் ⋆
பண்பாழித் தோள் பரவி ஏத்தென்னும் ⋆
முன்பூழி காணானைக் காண் என்னும் கண் ⋆
செவி கேள் என்னும் ⋆
பூண் ஆரம் பூண்டான் புகழ் ‖ **72** ‖

புகழ்வாய் பழிப்பாய் ⋆
நீ பூந் துழாயானை ⋆
இகழ்வாய் கருதுவாய் நெஞ்சே ⋆
திகழ் நீர்க் கடலும் மலையும் ⋆
இரு விசும்பும் காற்றும் ⋆
உடலும் உயிரும் ஏற்றான் ‖ **73** ‖

ஏற்றான் புள் ஊர்ந்தான் ⋆
எயில் எரித்தான் மார்விடந்தான் ⋆
நீற்றான் நிழல் மணி வண்ணத்தான் ⋆
கூற்றொருபால் மங்கையான் ⋆
பூமகளான் வார் சடையான் ⋆
நீள் முடியான் கங்கையான் நீள் கழலான் காப்பு ‖ **74** ‖

காப்புன்னை உன்னக் ⋆
கழியும் அரு வினைகள் ⋆
ஆப்புன்னை உன்ன அவிழ்ந்தொழியும் ⋆
மூப்புன்னைச் சிந்திப்பார்க்கில்லை ⋆

திருமாலே ⋆
நின் அடியை வந்திப்பார் காண்பர் வழி ‖ **75** ‖

வழி நின்று ⋆
நின்னைத் தொழுவார் ⋆
வழுவா மொழி நின்ற ⋆
மூர்த்தியரே ஆவர் ⋆
பழுதொன்றும் வாராத வண்ணமே ⋆
விண் கொடுக்கும் ⋆
மண் அளந்த சீரான் திருவேங்கடம் ‖ **76** ‖

வேங்கடமும் ⋆
விண்ணகரும் வெஃகாவும் ⋆
அஃகாத பூங்கிடங்கின் ⋆
நீள் கோவல் பொன் நகரும் ⋆
நான்கிடத்தும் நின்றான் இருந்தான் ⋆
கிடந்தான் நடந்தானே ⋆
என்றால் கெடுமாம் இடர் ‖ **77** ‖

இடர் ஆர் படுவார் ⋆
எழு நெஞ்சே ⋆
வேழம் தொடர் வான் ⋆
கொடு முதலை சூழ்ந்த ⋆
படம் உடைய பைந் நாகப் பள்ளியான் ⋆
பாதமே கை தொழுதும் ⋆
கொய்ந் நாகப் பூம் போது கொண்டு ‖ **78** ‖

கொண்டானை அல்லால் ⋆
கொடுத்தாரை யார் பழிப்பார் ⋆

மண் தா என இரந்து மாவலியை ⋆
ஒண் தாரை நீர் அங்கை தோய ⋆
நிமிர்ந்திலையே ⋆
நீள் விசும்பில் ஆரம் கை தோய அடுத்து ॥ **79** ॥

அடுத்த கடும் பகைஞர்க்கு ⋆
ஆற்றேன் என்றோடி ⋆
படுத்த பெரும் பாழி சூழ்ந்த விடத்தரவை ⋆
வல்லாளன் கைக் கொடுத்த ⋆
மா மேனி மாயவனுக்கு ⋆
அல்லாதும் ஆவரோ ஆள் ॥ **80** ॥

ஆள் அமர் வென்றி ⋆
அடு களத்துள் அஞ்ஞான்று ⋆
வாள் அமர் வேண்டி வரை நட்டு ⋆
நீள் அரவைச் சுற்றிக் கடைந்தான் ⋆
பெயர் அன்றே ⋆
தொல் நரகைப் பற்றிக் கடத்தும் படை ॥ **81** ॥

படை ஆரும் வாட் கண்ணார் ⋆
பாரசி நாள் ⋆
பைம் பூந் தொடையலோடேந்திய தூபம் ⋆
இடை இடையில் மீன் மாய ⋆
மாசூணும் வேங்கடமே ⋆
மேல் ஒரு நாள் மான் மாயவெய்தான் வரை ॥ **82** ॥

வரை குடை தோள் காம்பாக ⋆
ஆநிரை காத்து ⋆
ஆயர் நிரை விடை ஏழ் செற்ற ஆறென்னே ⋆

உரவுடைய நீர் ஆழியுள் கிடந்து ⋆
நேர் ஆம் நிசாசரர் மேல் ⋆
பேர் ஆழி கொண்ட பிரான் ॥ **83** ॥

பிரான் ! உன் பெருமை ⋆
பிறர் ஆர் அறிவார் ⋆
உராய் உலகளந்த ஞான்று ⋆
வராகத்தெயிற்றளவு ⋆
போதா வாறென் கொலோ ⋆
எந்தை அடிக்களவு போந்த படி ॥ **84** ॥

படி கண்டறிதியே ⋆
பாம்பணையினான் ⋆
புட்கொடி கண்டறிதியே கூறாய் ⋆
வடிவில் பொறி ஐந்தும் உள் அடக்கிப் ⋆
போதொடு நீர் ஏந்தி ⋆
நெறி நின்ற நெஞ்சமே ! நீ ॥ **85** ॥

நீயும் திருமகளும் ⋆
நின்றாயால் ⋆
குன்றெடுத்துப் பாயும் ⋆
பனி மறைத்த பண்பாளா ⋆
வாசல் கடை கழியா உள் புகாக் ⋆
காமர் பூங்கோவல் ⋆
இடை கழியே பற்றி இனி ॥ **86** ॥

இனி யார் புகுவார் ⋆
எழு நரக வாசல் ⋆
முனியாது மூரித் தாள் கோமின் ⋆

கனி சாயக் கன்றெறிந்த தோளான் ⋆
கனை கழலே காண்பதற்கு ⋆
நன்கறிந்த நாவலம் சூழ் நாடு ‖ **87** ‖

நாடிலும் ⋆
நின் அடியே நாடுவன் ⋆
நாள்தோறும் பாடிலும் ⋆
நின் புகழே பாடுவன் ⋆
சூடிலும் பொன் ஆழி ஏந்தினான் ⋆
பொன் அடியே சூடுவேற்கு ⋆
என் ஆகில் என்னே எனக்கு ‖ **88** ‖

எனக்காவார் ⋆
ஆர் ஒருவரே ⋆
எம் பெருமான் தனக்காவான் ⋆
தானே மற்றல்லால் ⋆
புனக் காயாம் பூ மேனி காணப் ⋆
பொதி அவிழும் பூவைப் பூ ⋆
மா மேனி காட்டும் வரம் ‖ **89** ‖

வரத்தால் வலி நினைந்து ⋆
மாதவ ! நின் பாதம் ⋆
சிரத்தால் வணங்கானாம் என்றே ⋆
உரத்தினால் ஈர் அரியாய் ⋆
நேர் வலியோன் ஆய இரணியனை ⋆
ஓர் அரியாய் நீ இடந்தூன் ‖ **90** ‖

ஊனக் குரம்பையின் ⋆
உள் புக்கிருள் நீக்கி ⋆

ஞானச் சுடர் கொளீ இ நாள்தோறும் ⋆
ஏனத்துருவா உலகிடந்த ⋆
ஊழியான் பாதம் ⋆
மருவாதார்க்குண்டாமோ வான் ‖ **91** ‖

வானாகித் தீயாய் ⋆
மறி கடலாய் மாருதமாய் ⋆
தேனாகிப் பாலாம் திருமாலே ⋆
ஆன் ஆய்ச்சி வெண்ணெய் விழுங்க ⋆
நிறையுமே ⋆
முன் ஒரு நாள் மண்ணை உமிழ்ந்த வயிறு ‖ **92** ‖

வயிறழல வாள் உருவி ⋆
வந்தானை அஞ்ச ⋆
எயிறிலக வாய் மடித்ததென் நீ ⋆
பொறி உகிரால் பூ வடியை ஈடழித்த ⋆
பொன் ஆழிக் கையா ⋆
நின் சேவடி மேல் ஈடழியச் செற்று ‖ **93** ‖

செற்றெழுந்து தீ விழித்துச் ⋆
சென்ற இந்த ஏழுலகும் ⋆
மற்றிவை ஆ என்று வாயங்காந்து ⋆
முற்றும் மறையவற்குக் காட்டிய ⋆
மாயவனை அல்லால் ⋆
இறையேனும் ஏத்தாதென்நா ‖ **94** ‖

நா வாயில் உண்டே ⋆
நமோ நாரணா என்று ⋆
ஓவாதுரைக்கும் உரை உண்டே ⋆

மூவாத மாக் கதிக்கண் செல்லும் ⋆
வகை உண்டே ⋆
என் ஒருவர் தீக் கதிக்கண் செல்லும் திறம் ‖ **95** ‖

திறம்பாதென் நெஞ்சமே ! ⋆
செங்கண் மால் கண்டாய் ⋆
அறம் பாவம் என்றிரண்டும் ஆவான் ⋆
புறம் தான் இம் மண் தான் ⋆
மறி கடல் தான் மாருதந் தான் ⋆
வான் தானே கண்டாய் கடைக்கட் பிடி ‖ **96** ‖

பிடி சேர் ⋆
களிறளித்த பேராளா ⋆
உன்றன் அடி சேர்ந்தருள் பெற்றாள் அன்றே ⋆
பொடி சேர் அனற்கங்கை ஏற்றான் ⋆
அவிர் சடைமேல் பாய்ந்த ⋆
புனற் கங்கை என்னும் பேர்ப் பொன் ‖ **97** ‖

பொன் திகழுமேனிப் ⋆
புரி சடையம் புண்ணியனும் ⋆
நின்றுலகம் தாய நெடுமாலும் ⋆
என்றும் இருவர் அங்கத்தால் ⋆
திரிவரேலும் ⋆
ஒருவன் ஒருவன் அங்கத்தென்றும் உளன் ‖ **98** ‖

‡ உளன் கண்டாய் நன்னெஞ்சே ! ⋆
உத்தமன் என்றும் உளன் கண்டாய் ⋆
உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய் ⋆
வெள்ளத்தின் உள்ளானும் ⋆

வேங்கடத்து மேயானும் ⋆
உள்ளத்தின் உள்ளான் என்றோர் ॥ **99** ॥

‡ ஓர் அடியும் சாடுதைத்த ⋆
ஒண் மலர்ச் சேவடியும் ⋆
ஈர் அடியும் காணலாம் என் நெஞ்சே ! ⋆
ஓர் அடியில் தாயவனைக் கேசவனைத் ⋆
தண் துழாய் மாலை சேர் ⋆
மாயவனையே மனத்து வை ॥ **100** ॥

தசக அடிவரவு — வையம் வாய் நின்று புரி குன்று எளிதில் உலகும் நன்று ஆள் ஊன் அன்பு

முதல் திருவந்தாதி முற்றிற்று

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்